**எல்பிடிய பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 06 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 17 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து எல்பிடிய பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளுராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 7,751,820 தொகைக்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 12,135,127 தொகை நிதிக்கூற்றுக்களில் ரூபா 12,266,954 தொகை என காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 02 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 2,015,738 இற்கான வித்தியாசம் ஒன்று காட்டப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **பெறவேண்டிய கணக்குகள்** | | |
| | நீண்ட காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டு வந்துள்ள பெக்கோ இயந்திர வருமானம் ரூபா 940,837 தொகை மற்றும் நிர்மாண வேலை தொடர்பாக பெறவேண்டிய ரூபா 62,475 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவீடு செய்தல் மேற்கொள்ளப் பட வேண்டும். | வருமானம் அறவீடு தொடர்பாக தொடர்ச்சியாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | **செலுத்தவேண்டிய கணக்கு** | | |
| | கடந்த ஆண்டுகள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 727,190 தொகைக்கான 04 மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்த்தல் மேற் கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் முறைப்பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

1.3.4 **கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 109,954,372 தொகைக்கான 07 கணக்கு விடயங்களுக்கு தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

1.4 **இணக்கமின்மைகள்**

1.4.1 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | | | |
| (i) பிரிவு 159 | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 3,393,672 தொகைக்கான கடை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடி க்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் பிரிவின் பிரகாரம் செயற்படுவேன். |
| (ii) பிரிவு 132 | பிரதேச சபை நிதியத்தை பயன்படுத்த முடியாத கருமங்களுக்காக ரூபா 235,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக் கணித்துள்ள நபர்கள் தொடர் பான அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. | வீதவரி தொடர்பாக ஆதனங்களை தடை செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) விதி 59 | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கைத்தொழில்கள் தொடர்பான அட்டவணை ஒன்று தயாரித்திருக்கவில்லை. | சபையின் அதிகாரப் பிரதேசத்துக்குரிய கைத்தொழில் தொடர்பான அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பிரிவின் பிரகாரம் செயற்படுவேன். |
| (iii) விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று தயாரித்திருக்கவில்லை. | குறிப்பிட்டுள்ளவாறு சட்டத்தின் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் பிரிவின் பிரகாரம் செயற்படுவேன். |
| (iv) விதி 218 | சபைக்குச் சொந்தமான அனைத்துக் காணிகள் மற்றும் கட்டடங்களை வருடாந்தம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அனைத்து காணிகள் மற்றும் கட்டடங்களை வருடாந்தம் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை இடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பிரிவின் பிரகாரம் செயற்படுவேன். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>-----------------------------------------------<br>நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571 | 02 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 85,000 தொகை பெறுமதியான வைப்பு மீதி ஒன்று தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) 2015 ஜூலை 10 திகதிய PFD/ASD/02/VEH/CIR/2015 இலக்கங் கொண்ட நிதியமைச்சின் சுற்றறிக்கை | ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்த 04 வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்க நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் 2016 திசெம்பர் 26 திகதிய 30/2016 இலக்க சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஊ) | 2010 திசெம்பர் 27 திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் 2010/01 சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவு | 43 கடையறைகள் தொடர்பான வாடகை ஒப்பந்தங்கள் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 31,493,028 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 25,251,341 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 3,133,000 | 4,068,620 | 2,243,642 | 15,385,737 | 3,077,000 | 3,193,888 | 1,648,687 | 13,560,759 |
| வாடகை | 2,060,000 | 2,190,345 | 1,754,790 | 3,393,672 | 2,060,000 | 2,059,200 | 2,408,550 | 2,958,117 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 800,000 | 895,058 | 882,578 | 105,534 | 900,000 | 977,459 | 906,965 | 93,054 |
| ஏனைய வரு மானங்கள் | 13,200,000 | 36,289,872 | 29,000,000 | 28,732,322 | 12,500,000 | 24,237,553 | 17,500,000 | 21,442,450 |
| | 19,193,000 | 43,443,895 | 33,881,010 | 47,617,265 | 18,537,000 | 30,468,100 | 22,464,202 | 38,054,380 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 27,895,755 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 836,567 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. | பெறவேண்டிய வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் குறிப்பிட்ட வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொதுப் பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| துணை விதிகளின் படி சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | துணை விதிகளின் படி செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

#### (ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| குப்பை முகாமைத்துவம் தொடர்பாக முறையான நீண்ட காலத் திட்டமொன்று சபையினால் செயற்படுத்தியிருக்கவில்லை. | குப்பை முகாமைத்துவம் தொடர்பாக முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான நீண்ட காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 செப்டம்பர் 26 திகதி முதல் தகனசாலை செயற்படாத நிலைமையில் காணப்பட்டதுடன் தேவையான திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் தகனசாலையின் புகைக்கூடம் முற்றாக உடைந்து விழுந்து கூரைக்கும் சேதம் ஏற்பட்டிருந்தது. | திருத்த வேலைகள் தாமதமின்றி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பதவியணி திட்டத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 12 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் 05 மிகைகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை நிறப்புவதற்கு மற்றும் மிகைகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4 பயனற்ற செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வீதவரி மென்பொருள் ஒன்று கொள்வனவு செய்வதற்காக 2014 ஆண்டின் போது ரூபா 137,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2019 நவம்பர் அளவில் அந்த வீதவரி பெக்கேஜ் முற்றாக கைவிடப்பட்டிருந்தமையால் அதற்காக செலவிடப்பட்ட தொகை பயனற்ற செலவொன்றாக இருந்தது. | குறிப்பிட்ட மென்பொருளை செயற்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |